# சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි

21.08.2020 வெள்ளிக்கிழமை


## வாரத்தில் ஒருநாள் ‘பற்றிக்’!

கொழும்பு, ஓக.21
அரச ஊழியர்கள் வாரத்தில் ஒருநாள் ‘பற்றிக்’ அல்லது உள்நாட்டு ஆடையை அணிந்து வரவேண்டும் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பான சட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என 2

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் 12 எம்.பிக்கள்

கொழும்பு, ஓக.21
நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். இன்று காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியபோது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இந்தப் பெயர்களை முறையாக அறிவித்தார். 2

## யுனிசெப் பாராட்டு

கொழும்பு, ஓக.21
கொரோனாவைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பாக மாணவர்களை பாடசாலைக்கு அழைத்து வந்த முதல் நாடு இலங்கை என்று யுனிசெப் நிறுவனம் பாராட்டுத் தெரிவித்துள் 2

## புதினம் தெரியுமோ?

நேற்று 9 ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு. இதன்போது முறையே விக்னேஸ்வரன், மனோகணேசன், சுமந்திரன்,. சம்பந்தன் ஆகியோர் ஒரே வரிசையில் அமரும் வகையில் அவர்களுக்கான ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாடாளுமன்றஅமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, சுமந்திரன்,சம்பந்தன், மனோ கணேசன் ஆகிய மூவரும் தமக்குள் அளவளாவிக் கொண்டிருந்தனர். இடைக்கிடையே மனோகணேசன் மட்டும் விக்னேஸ்வரனோடு சில வார்த்தைகள் சம்பிரதாயமாக உரையாடினார். மற்ற இருவரும் திரும்பிக் கூடப் பார்க்கவில்லையாம். ஆனால் இதே சம்பந்தரும், சுமந்திரனும் ‘சபை நாகரிகம்’ 2

# விக்கி உரையால் எழுந்தது சர்ச்சை



**ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறும் வலியுறுத்து ஆராயப்படுமென சபாநாயகர் பதில்**

**கொழும்பு, ஓக.21**
**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.** 2

## இந்தியத் தூதரை சந்திக்கின்றது கூட்டமைப்பு

கொழும்பு, ஓக.21
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு இன்று மாலை நடக்கவுள்ளது.
கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், 2

## பொலிஸ் மீது தாக்குதல்: யாழ்.நகரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.21
பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு அருகில் இன்று காலை நடந்துள்ளது.
காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோ 2

## கட்டுநாயக்கவில் பறிக்கப்பட்டது ‘குஷ்’

கொழும்பு, ஓக.21
வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ‘குஷ்’ எனப்படும் கஞ்சா கட்டுநாயக்க இலங்கை சுங்கப் பிரிவின் போதைப்பொருள் தடுப்பு பிரிவால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சுமார் 22 இலட்சம் ரூபா 2

## யாழ். போதனாவுக்கு நவீன சிசி ஸ்கேனர்!

கொழும்பு, ஓக.21
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 160 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன டிஜிற்றல் சிசி ஸ்கேனர் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.
இது தொடர்பால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா கருத்து தெரிவித் 2

## அரசமைப்பு தொடர்பாக ஆராய சு.க. சிறப்பு குழு!

கொழும்பு, ஓக.21
புதிய அரசமைப்புத் தொடர்பாக ஆராய்வதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிறப்புக் குழுவொன்றை நியமிக்கவுள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரி வித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் 2

## கட்சித் தலைமை மணிக்குத் “தடா”

**ஊடக சந்திப்பை நடத்தவிடாது கட்சி அலுவலகம் மூடப்பட்டது**

யாழ்ப்பாணம், ஓக.21
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன் இன்று நடத்தவிருந்த ஊடக சந்திப்பு கைவிடப்பட்டுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மற்றும் தேசிய அமைப்பாளர் பதவிகளில் இருந்து 2

## புதினம் தெரியுமோ

கருதி கோத்தாபயவையும், மகிந்தவை யும் சந்தித்து கைலாகு கொடுத்து உரை யாடினர். மகிந்தவையும் ,கோத்தாவை யும் கொள்கை வேறுபாடு இருந்தாலும், சந்திக்க மனம் இருந்தவர்களுக்கு தாமே அரசியலுக்கு வலிந்து இழுத்து வந்த விக்னேஸ்வரனைப் பார்த்து சம் பிரதாயத் துக்கேனும் புன்னகைக் கவோ, உரையாடவோ மனமில்லாமல் போனது குறித்து அங்கிருந்த ஊடகவி யலாளர் கள் சிலாகித்துக் கொண்டனர். அவ்வளவு ஏன், அங்கஜனோடு கூட செல்பி எடுத்தவர்களுக்கு பக்கத்தில் இருந்த விக்னேஸ்வரன் திரும்பிக் கூட பார்க்க முடியாதளவுக்கு பரம விரோதி யாகி விட்டாரா? இப்படி சின்னப்பிள் ளைத்தனமாக நமக்குள் முரண்பட்டால் எப்படி ஒற்றுமையோடு தமிழர்களுக்காக குரல்கொடுக்க முடியும். என்னவோ ஆரம்பமே சரியில்லை. அவ்வளவு தான். – பட்சி

## விக்கி உரையால்...

விக்னேஸ்வரனின் உரையை ஹென்சாட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண் டும் என்று சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பி னர் மனுஷ நாணயக்காரவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்தபோதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்த விவகாரம் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பிய மனுஷ நாணயக்கார தெரிவித்ததாவது:
இந்தநாட்டில் தனி ராஜ்ஜிய மொன்றை நிறுவுவதற்கோ, அவ்வாறான முயற்சிக்கு ஒத்து ழைப்பு மற்றும் நிதி பங்களிப்பு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம் என்று இந்த சபையில் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர்.
ஆனால், போர் முடிவடைந்து, பூர்வீக கோட்பாடு உள்ளிட்ட விடயங்கள் எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு அனைவரையும் இலங்கையராக ஏற்கும் நிலைக்கு முழு நாடும் வந்துள்ள நிலையில் இந்த நாடா ளுமன்றத்தில் விக்னேஷ்வரன் சர்ச்சைக்குரிய வகையில் உரை யாற்றியுள்ளார்.
இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்று இந்த நாடாளுமன்றத்தில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.
அவ்வாறான கருத்து ஹன்சாட்டில் இடம்பெறுவது தவறு. சிலருக்கு தனிப்பட்ட ரீதியில் சில நிலைப் பாடுகள் இருக்கலாம். இந்நாட் டின் பூர்வீக குடிமக்கள் யார், மொழி எது என தனிப்பட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால், அவ்வாறான கருத்து இலங்கை நாடாளுமன்றத்தின் ஹன்சாட்டில் இடம்பெறுவது தவறு. எனவே, ஹன்சாட்டில் இருந்து இக்க ருத்தை நீக்குமாறு கோருகின்றேன் என்றார்.
இதற்கு பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் தேடி ஆராயப்ப டும் என்று குறிப்பிட்டார்.(எ44)

## யுனிசெப் ...

எது. யுனிசெப் நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதி விம்சுடன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட் டுள்ளது.
மாணவர்களின் கல்வி நடவடிக் கைக்கு சிறந்த இடம் பாடசாலை. பாடசாலைகளை திறப்பது மிகவும் முக்கியமாகும். பாடசாலைகளை மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் கற்கை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்ற போதிலும் கற்பதற் கான சிறந்த இடம் பாடசாலையா கும். எப்படியிருப்பினும் கொரோனா தடுப்புக்கான சுகா தார வழிக்காட்டல்களை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.(எ)

## பொலிஸ் மீது ...

கத்தர் ஒருவர் சிவில் உடையில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு அருகில் ஓட்டோ ஒன்றை வாடகைக்குக் கேட்டுள்ளார். அதற்கு அதிக வாடகைப் பணம் கேட்டது என்றும், அதனால் அவர் ஓட்டோவை வாடகைக்கு எடுக் காது சென்றார் என்றும் கூறப்படுகின்றது. அதையடுத்து ஓட்டோ சாரதிகள் அவரைக் கிண்டலடித்தனர் என்றும், அதையடுத்து ஏற்பட்ட வாக்குவாதத்தில் பொலிஸ் உத்தி யோகத்தர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக் கப்படுகின்றது.
இந்த விடயம் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று பொலி ஸார் தெரிவித்தனர். (எ)

## வாரத்தில்...

வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பற்றிக் கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பத்திக் ஆடை அணிந்தே நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தார்.
இந்தநிலையில் அரச ஊழியர்களுக்கு ஆடை தொடர்பான சட்டம் இயற்றுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது– என்றார். (எ)

## நாடாளுமன்ற...

அரசாங்க தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு எம். பிக்களும், எதிர்த் தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.
நிமல் சிறிபால டிசில்வா, தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, டக்ளஸ் தேவா னந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, பிரசன்ன ரண துங்க, லக்ஸ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், விஜித்த ஹேரத், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(எ)

## இந்தியத் தூதரை....

அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்க ளான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், மாவை சோ. சேனாதிராஜா ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.(எ)

## கட்டுநாயக்கவில்...

பெறுமதியான இந்த 222 கிராம் குஷ் கஞ்சாவை, இலங்கை சுங்கப் பிரிவின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள ஒரு பொதிகளை விநியோகம் செய்யும் நிறுவனத்திடமிருந்து பறிமுதல் செய் துள்ளனர்.
கடந்த சில வாரங்களாக சுங்கப் பிரிவினர் சேகரித்த உளவுத் தகவ லுக்கு அமைவாக இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.
இந்த குஷ் கஞ்சா அமெரிக்காவிலி ருந்து பொதிகள் மூலம் இலங்கையில் வசிக்கும் நபர்களுக்கு அனுப்பப்பட் டுள்ளது என்று தெரிவித்த அதிகாரி கள், அதைப் பெற்றுக்கொள்ள எவரும் இன்னும் வரவில்லை என்றும் கூறியுள்ளனர்.
பிஸ்கட் பொதி , தொலைபேசிகள் மற்றும் கிருமி நீக்கும் கருவிகள் என்பவற்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைக்கப்பட்டு கொழும் பில் வெவ்வேறு பகுதிகளில் வசிக்கும் நபர்களுக்கு இவை அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.
இது தொடர்பில் இது வரையில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை என்றும் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருவதாக சுங்க திணைக்கள போதைப்பொருள் கட்டுப் பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.(எ)

## அரசமைப்பு....

கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
புதிய அரசமைப்புத் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்காகக் குழுவொன்றை அமைக்க மத்திய குழு தீர்மானித்துள்ளது. அந்தக் குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கேற்ப எமது நிலைப்பாடு வெளிப்படுத்தப்ப டும். நாட்டுக்கு அவசியமான அரசமைப்பை உருவாக்கு வதற்குத் தேவையான பலத்தை வழங்க நாம் தயாராக இருக்கின்றோம். அதற்கான நடவடிக்கைகள் மற்றும் சமகால அரசியல் நிலைவரம் தொடர்பாக தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## கட்சித் தலைமை....

வி.மணிவண்ணன் கட்சித் தலைமையால் நீக்கப்பட்டார். அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கட்சியின் மத்திய குழுவால் முன்வைக்க அது வி.மணிவண்ணனுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நேற்றுக் கட்சித் தலைமைக்குப் பதில் அனுப் பியிருந்த மணிவண்ணன், இன்று தனது நிலைப்பாடு தொடர்பில் ஊடக சந்திப்பு நடத்தப்படும் என்று நேற்று அறிவித்திருந்தார்.
இன்று பிற்பகல் கட்சி அலுவலகத்தில் அவர் ஊடக சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த நிலை யில், அங்கு ஊடக சந்திப்பு நடத்தக் கட்சித் தலைமை அனுமதி மறுத்துள்ளது. அங்கிருந்தவர்களை வெளியேற்றி கட்சி அலுவலகம் மூடப்பட்டது. அதனால் ஊடக சந்திப்பு இறுதி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளது.(எ26)

## யாழ். போதனாவுக்கு...

துள்ளதாவது:
யாழ். போதனா வைத்திய சாலைக்கு சுகாதார அமைச்சால் டிஜிற்றல் சிசி ஸ்கேனர் இன்று உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. இது சுமார் 160 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டும் தற்போது காணப்படுகின்றது. அடுத்த தாக தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது இதன் மூலம் நோயாளிகளில் சில நோய்களை இலகுவாக இனங்கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும். குருதிக் கலன்களின் நாடி, நாளங்களில் அடைப்பு ஏற்படும்போது இந்த கருவி மூலம் இலகுவாக கண்டறியக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் சிறுநீரகத்துக்குச் செல்லக்கூடிய கலங்களில் ஏற்படும் மாற்றம் மற்றும் மூளைக்குச் செல்லும் கலங்கள், இதயத்தில் ஏற்படுகின்ற அடைப்புகளை இலகுவாக கண்டறியக் கூடியதாக இருக்கின்றது. இதற்குரிய தகுதி வாய்ந்த வைத்திய ஆளணியினரும் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர். என்றார். (எ)

# கொள்கைப் பிரகடன உரையில் சிறுபான்மையினருக்குத் தீமை

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.21

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் சில நன்மைகள் உள்ள போதும், சிறுபான்மை இன மக்களுக்கு தீமைகளும் உள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நேற்று இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து செய்திச் சேவையொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் எதிர்வரும் அமர்வுகளில் பிரஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (ரி1)

## புதிய கல்வித்திட்டம்; மக்களின் கருத்துக்கள் கேட்டறிய ஏற்பாடு

கொழும்பு, ஓக.21

புதிய கல்வித்திட்டம் குறித்து மக்களின் கருத்துகளைக் கேட்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் முதல் இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட ரீதியில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயரத்ன நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்பள்ளிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக மகளிர் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ரி2)

## ஹெரோய்ன் விற்பனை; பெண் கைது

கொழும்பு, ஓக.21

பொரளை மற்றும் நுகேகொடை உட்பட பல பிரதேசங்களில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் (வயது31) நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 30 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ரி2)

## சிறையிலுள்ள எம்.பி. ஜயசேகர அமர்வில் பங்குபற்ற ஏற்பாடு

கொழும்பு, ஓக.21

சிறையிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு சிறைச்சாலை திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர நேற்றைய அமர்வில் கலந்து கொள்ளவில்லை. இந் நிலையில் நாடாளுமன்ற அமர்வுகளில் பிரேமலால் ஜயசேகர கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நாடாளுமன்ற சார்ஜென்ட் தகவல் வழங்கியுள்ளார். புதிய நாடாளுமன்றத்துக்கான கன்னி அமர்வு நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் இன்றும் இடம்பெறவுள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது பிரசாரக் கூட்டமொன்றில் துப்பாக்கிச் சூட்டினை நடத்தி ஒருவரைக் கொலை செய்தமை மற்றும் இருவருக்கு காயம் ஏற்படுத்திய குற்றங்களுக்காக பிரேமலால் ஜயசேகரவுக்கு இரத்தினபுரி மேல் நீதி மன்றத்தால் மரண தண்டனை விதித்துள்ளது. (ரி1)

## கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக.21

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒரு வர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 80 லீற்றர் கசிப்பும், 250 லீற்றர் கோடாவும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ரி2-316)



## விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஓக.21

தந்தை ஒருவர் தனது மகளின் திருமண நாள் அன்று பாரவூர்தி ஒன்றுடன் மோதுண்டு உயிரிழந்துள்ள சம்பவம் தும்மலசூரிய பிபிலதெனிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. 70 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது மகளுடன் அழகு நிலையத்துக்கு சென்று விட்டு, பின்னர் அவர் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை தும்மலசூரிய பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ரி2)

## மத்தியஸ்த சபைகள் நாளை முதல் இயங்கும்

மட்டக்களப்பு, ஓக.21

நாட்டில் கொரோனாப் பரவல் காரணமாக பல மாதங்கள் இயங்காது இடைநிறுத்தப்பட்டிருந்த மத்தியஸ்த சபைகளின் அமர்வுகளை நாளை சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழு எடுத்துள்ளது. நாட்டில் பிரதேச செயலாளர் பிரிவுகள் ரீதியாக இதுவரை 329 மத்தியஸ்த சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அனேகமாக, சபை அமர்வுகள் வார இறுதி நாள்களில் பாடசாலைகளிலேயே இயங்கிவந்தன. பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையால், மத்தியஸ்த சபைகளின் அமர்வுகள் பல மாதங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மத்தியஸ்த சபைகள் குழாம் அமர்வுகளை ஆரம்பிப்பதற்கான ஏது நிலை ஏற்பட்டுள்ளது. சுகாதார வழிகாட்டுதல்களுக்கமைய மத்தியஸ்தக் குழாம் அமர்வுகளையும் ஆரம்பிப்பதற்கு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது என மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மத்தியஸ்த பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.முகம்மட் ஆஸாத் தெரிவித்தார். (ரி1-30)



## விபத்தில் 16 வயது சிறுவன் உயிரிழப்பு

வாழைச்சேனை, ஓக.21

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி தனஜய பெரமுன தெரிவித்தார். வாகனேரி சுற்றுலா விடுதியைச் சேர்ந்த 16 வயதுடைய நடராஜா தனுஜன் என்ற சிறுவனே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். சிறுவன், பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் ஆலய உற்சவத்தில் கலந்து கொண்டுவிட்டு வீட்டை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்துள்ளார். இதன்போது வேக கட்டுப்பாட்டினை இழந்து மோட்டார் சைக்கிள் பாதையைவிட்டு விலகி விபத்திற்குள்ளானதால் விபத்து ஏற்பட்டுள்ளது என வாழைச்சேனைப் போக்குவரத்து பொலிஸார் தெரி வித்தனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச் சேனை ஆதார வைத்திய சாலையில்வைக்கப் பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பாக வாழைச் சேனை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ரி1-150)

# தகவல் அறியும் உரிமையை 20ஆவது திருத்தம் பாதிக்காது

## உதய கம்மன்பில நம்பிக்கை

கொழும்பு, ஓக.21

20ஆவது அரசமைப்புத் திருத்தம் உருவாக்கப்படும் போது அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தகவலறியும் உரிமை சட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுமக்களின் உரிமைகளை பாதுகாக்கும் விடயங்களுக்கு முழுமையான பாதுகாப்பை அரசாங்கம் வழங்கும். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்துச் செய்வது அரசாங்கத்தின்



நோக்கமல்ல, இத்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் கடந்த காலங்களில் அரச நிர்வாகத்தில் பெரும் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய திருத்தம் உருவாக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பு. அரசமைப்பின் 19ஆவது திருத்தின் சாதகமான விடயங்கள் அரசமைப்பின் 20ஆவது திருத்த சட்ட வரைவில் உள்வாங்கப்படும். தகவலறியும் உரிமை அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உருவாக்கப்பட்டமை சிறந்த ஒரு விடயமாகும்.

அரச விடயங்கள் தொடர்பான விடயங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு உரிமை உண்டு. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் உருவாக்கப்படுவதினால் தகவலறியும் திருத்தச்சட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும். சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனத் தெரிவித்தார். (ரி1)

## சீரான வானிலை நிலவும்

சில மாகாணங்கள் தவிர நாட்டின் ஏனைய இடங்களில் சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் சிறிதளவில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும். காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளது. (ரி1)

## அனுமதி அட்டைகளை பெறவும்

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2019ஆம் ஆண்டு 2ஆம் பருவகால அனைத்து கற்கை நெறிகளினதும் இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த சாதாரண, மீள் மற்றும் விசேட மீள் பரீட்சார்த்திகள் தங்களுக்கான பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை துறைத் தலைவர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் என்று உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வெளிநாட்டு இறக்குமதிகள் நிறுத்தம்; அரசின் அறிவிப்பை வரவேற்கின்றோம்

### யாழ். கமக்காரர் அமைப்பு அதிகார சபை தெரிவிப்பு

வெளிநாட்டு இறக்குமதிகள் நிறுத்தப்பட்டு உள்நாட்டு உற்பத்திகள் ஊக்குவிக்கப்படும் என்று புதிய அரசாங்கம் அறிவித்ததை வரவேற்கின்றோம் என யாழ் மாவட்ட கமக்காரர் அமைப்பு அதிகார சபையின் தலைவர் க.தியாகலிங்கம் தெரிவித்தார் யாழ்ப்பாணத்தின் விவசாய நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ் மாவட்டத்தில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குச் சந்தையில் நியாயமான விலை கிடைப்பதில்லை. எனினும் இந்தப் புதிய அரசாங்கம் உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுப்போம் எனவும் வெளிநாட்டு இறக்குமதியை கூடுதலாக நிறுத்துவோம் எனவும் அறிவித்துள்ளது. இது வரவேற்கக் கூடிய ஒரு விடயம். இதனைச் செயற்படுத்த வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். யாழ் மாவட்ட விவசாயிகள் இவ்வருடம் உருளைக்கிழங்கைப் பெரும் போகத்தில் அதிகளவில் பயிரிடவுள்ளார்கள். 350 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு கிடைக்குமாக இருந்தால் அதனைப் பயிரிட்டு அதன் மூலம் அவர்கள் பயனடைவர். கட்டாக்காலி நாய்களால் விவசாயிகள் பெரும் பிரச்சினையினை எதிர்கொள்கின்றனர். ஒரு நாளில் 20 பேர் வரையில் நாய்க் கடிக்கு இலக்காகின்றனர். எமது விவசாய நடவடிக்கைகளும் இவற்றால் பாதிப்படைகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இம்முறை காலம் பிந்திய மழையால் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இந்த அழிவுக்கு எந்த அரசாங்கமும் எமக்கு நிவாரணம் வழங்கியதில்லை. புதிய அரசாங்கம் விவசாயிகளின் பொருளாதாரத்தினை கருத்தில் கொண்டு இந்த வெங்காய அழிவுக்கு உரிய நிவாரணத்தை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ரி1)

## சாந்தபண்டார பதவி விலகத் தீர்மானம்

கொழும்பு, ஓக.21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் பதவியிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தபண்டார விலகுவதற்கு தீர்மானித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தான் நீண்ட காலமாக இந்தப் பதவியை வகித்து வருகின்றமையினால், புதியவர் ஒருவருக்கு இந்த வாய்ப்பை வழங்குவதற்காக, பதவி விலகத் தீர்மானித்துள்ளேன் என்று சாந்தபண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரி2)







கொடிகாமம் ஐயனார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-159)

# நிஷாந்த சில்வாவை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஓக.21

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள, சி.ஐ.டி.யின் முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வாவை கைது செய்ய கம்பஹா நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரான பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர, சி.ஐ.டி. முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் மெண்டிஸ் ஆகியோர், சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பம்பலபிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள, முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிரான விசாரணைகளில், சந்தேகநபர்களைக் கைதுசெய்ய புதிதாக சாட்சியங்களை உருவாக்கினார் என கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு முன்வைத்த கோரிக்கையை ஏற்று, கம்பஹா நீதிவான் மஞ்சுள கருணாரத்ன இந்த உத்தரவை நேற்று பிறப்பித்தார். (ரி1)

# பெருந்திருவிழா

ஊர்காவற்றுறை, ஓக.21

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டார புலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெரந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. தொடர்ந்து 11 நாள்கள திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கி ழமை மாலை சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய சைவ மகா சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# 135 இலங்கையர்கள் நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஓக.21

கொரோனா அச்சத்தினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக கட்டார் மற்றும் தாய்லாந்தில் சிக்கியிருந்த மேலும் 135 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். அதன்படி கட்டாரிலிருந்து 47 இலங்கையர்களும், தாய்லாந்திலிருந்து 88 இலங்கையர்களும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளிடமும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதை அடுத்து அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.(ரி2)

# காலத்துக்கேற்ப பாடவிதானங்களை நவீனப்படுத்த கல்வி அமைச்சு திட்டம்

கொழும்பு, ஓக.21

தற்போதைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு பாடவிதானங்களை நவீனப்படுத்தவுள்ளதாகவும், அபிவிருத்திக்காக புதிய அமைச்சரவை பத்திரம் ஒன்றை தயாரிக்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதான பாடசாலைகளின் அதிபர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த அமைச்சரவைப் பத்திரம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது என்றும், உயர்தரங்களுக்கான பாடப்புத்தகங்களை வழங்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)

# இடைமாற்று வீட்டு அலகுகள் அமைக்க இந்தியா நிதி உதவி

கொழும்பு, ஓக.21

மன்னாரில் இடைமாற்று வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் ஆர்.ஏ.கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான கவுன்சிலர் பானு பிரகாஷ், ஆர்.ஏ. கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தினரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர். பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப், சுற்றுலாத்துறை அமைச்சின் செயலர் எஸ். ஹெட்டியாராச்சி ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டமைக்கு அமைவாக மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த 144 இடைமாற்று வீட்டு அலகுகளுக்கும் இந்திய அரசாங்கம் 30 கோடி இலங்கை ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது. (ரி1)

# மதுபான போத்தல்களின் மீள்சுழற்சிக்கு புதிய திட்டம்

*கலால் திணைக்களம் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.21

பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் மதுபானப் போத்தல்களை மீள்சுழற்சிக்குட்படுத்த புதிய வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையுடன் இணைந்து கலால் திணைக்களம் இதை முன்னெடுக்கவுள்ளது. உபயோகித்த பின் வெளியேற்றப்படும் மதுபான போத்தல் மற்றும் டின்களால் சூழல் மாசடைகிறது என கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் பிரகாரமே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவற்றை மீள்சுழற்சியின் மூலம் மீண்டும் பாவனைக்கு எடுத்துக்கொள்வதுடன், தேசிய வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களும் இதனால் பயன்பெறுவர் எனவும் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. வருடத்திற்கு ஒருதடவை பயன்படுத்தப்பட்ட 30 கோடி மதுபான போத்தல்களும், 16 கோடி மில்லியன் டின்களும் முறையாக அகற்றப்படுவதில்லை என்று மத்திய சுற்றுசூழல் அதிகாரசபை சுட்டிக் காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி1)



வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை ஆலய பிரதம குரு சட்டநாதக் குருக்கள் யோகசசம்பந்தக் குருக்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 15 நாள் கள் திருவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-70)

# தேசிய விளையாட்டு சபை தலைவராக மஹேல

கொழும்பு, ஓக.21

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தேசிய விளையாட்டு சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறித்த நியமனத்தை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் உறுப்பினர்களாக இலங்கை கிரிக் கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, ஜூலியன் போலிங், திலன்த மாலகமுவ, கஸ்தூரி செல்லராஜா வில்சன், சுபுன் வீரசிங்க, ரொஹான் பெர்னாண்டோ, ருவன் கேரகல, சஞ்சீவ விக்ரமநாயக்க, மேஜர் ஜெனரல் ராஜித அம்பேமொஹட்டி, ரொவேனா சமரசிங்க, யஸ்வந்த் முத்தெட்டுவேகம, ஏ.ஜெ.எஸ்.எஸ். எதிரிசூரிய மற்றும் தியுமி அபேசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ரி2)

# அதிபர் காரியாலய கட்டடத் திறப்பு


மன்னார், ஓக. 22

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட அதிபர் காரியாலயக் கட்டடம் நேற்று வைபவரீதியாகத் திறக்கப்பட்டது.

வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் திறப்பு நிகழ்வு அதிபர் பி.டியூட்சன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(ஐ-56)



# மாலி இராணுவ புரட்சி; ஐ.நா. சபை கண்டனம்



பமாகோ, ஒக.21
மேற்கு ஆபிரிக்க நாடான மாலி குடியரசில் இராணுவப் புரட்சி ஏற்படுத்தப்பட்டுள்ள மைக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.
இராணுவத்தால் சிறை பிடிக் கப்பட்டுள்ள ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் உள்ளிட்ட அரச அதிகாரி களை உடனடியாக விடுதலை செய்து அரசமைப்பை மீள நடைமுறைப்படுத்துமாறு ஐ.நா. பாதுகாப்பு பேரவை அழைப்பு விடுத்துள்ளது.
ஜனாதிபதி இப்ராஹிம் பூபக ரின் கெய்ட்டா ஊழல் நிர்வா கம் காரணமாக நாட்டின் பொருளாதாரமும் பாதுகாப் பும் வீழ்ச்சியடைந்துள்ளன எனத் தெரிவித்து கடந்த சில நாள்களாக எதிர்க்கட்சி எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த நிலையில் நாட்டில் இராணு வப் புரட்சி ஏற்பட்டுள்ளது எனத் தகவல் வெளியானது.
அது சூழ்ச்சியாக மாற்றம் பெற்றதுடன் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் பொறுப்பை வகிக்கும் ஜனாதி பதியின் புதல்வர் ஆகியோர் இராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்டனர்.
மக்களை விடுவிக்கும் தேசிய குழு என அறிமுகப்படுத்திக் கொண்ட இராணுவ உறுப்பி னர்கள் நாட்டின் ஆட்சியை தாம் கைப்பற்றவில்லை என வும் நாட்டில் ஸ்திரத்தன் மையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது எனவும் ஊடகங்களின் மூலம் அறிவித் தனர். சிவில் அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதா கவும் அவர்கள் குறிப்பிட்டுள்ள னர். ஆட்சிக் கவிழ்ப்பு தலை வர்கள் பமாகோவில் பதவி நீக்கப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களுடன் கலந்து ரையாடலில் ஈடுபட்டுள்ள னர். (ரி1)



## கலிபோர்னியா காட்டுத் தீ; அவசர நிலை பிரகடனம்

நியூயோர்க், ஒக.21
கலிபோர்னியா மாநிலத்தில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு பின்னர் பெரும் காட்டுத் தீ பரவியுள்ளமையே இதற்கு காரணம் என களிபோர்னியா மாநில ஆளுநர் தெரிவித்துள் ளார். 85 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பு காட்டுத் தீயினால் முற்று முழுதாக அழிந்துள்ளது. தீயைக் கட்டுப்படுத்துவதற்காக தீயணைப்பு படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர், ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.
காட்டுத் தீயை அணைக்கும் பணியின்போது தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி உள்ளனர். கலிபோர்னியா மட்டும் அல்லது சான் பிரான்ஸிஸ்கோவிலும் காட்டுத் தீயினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து காட்டுத் தீயை அணைக்கும் பணி இடம்பெற்றுவருகின்றது. (ரி1)

## கனேடிய முதல்பெண் நிதி அமைச்சராக கிறிஸ்டியா

ஒட்டாவா, ஒக.21
கனடாவின் முதல் பெண் நிதியமைச்சராக கிறிஸ்டியா ப்ரீலேண்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நிகழ்வு ரிடே மண்டபத்தில் மிக எளிமை யாக நடைபெற்றது.
கொரோனா வைரஸ் காரணமாக நாட்டின் பொருளாதாரம் நெருக்க டிக்குள்ளான நிலையில், புதிய நிதி அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். 52 வயதான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் இதற்கு முன்னர் பிரதி அமைச்சராக பதவி வகித்துள்ளார்.
முன்னாள் ஊடகவியலாள ரான அவர் 2015 ஆம் ஆண்டு முதன்முறையாக அரசியலுக்குள் பிரவே சித்தார். நிதியமைச்சராக பதவி வகித்த பில் மோர்னே, பயணச் செலவை மீள செலுத்தாத குற்றச்சாட்டில் அண்மையில் பதவி விலகி னார். (ரி1)



## படகு கவிழ்ந்ததில் 45 பேர் உயிரிழப்பு

திரிபோலி, ஒக.21
லிபியாவிலிருந்து மத்திய தரைக்கடல் வழியே புலம்பெயர முயன்றவர்களின் படகு கடந்த 17 ஆம் திகதி விபத்துக்குள்ளா னதில் 5 குழந்தைகள் உட்பட 45 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
செனகல், மாலி, சாட், கானா உள்ளிட்ட இடங்களைச் சேர்ந் தோர், கடல் வழியே இத்தாலிக்கு புலம்பெயர முயன்றபோது ஸ்வாரா கடற்கரை அருகே அவர்களின் படகின் என்ஜின் வெடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.
இவ் விபத்தில் 45 பேர் உயிரிழந்த நிலையில், தப்பி பிழைத்த 37 பேர் மீனவர்களால் பத்திரமாக மீட்கப்பட்டனர் என இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு மற்றும் ஐ.நா சபை தெரிவித்துள்ளது. (ரி1)



## பூமியை நெருங்கிய கார் அளவு விண்கல்



நியூயோர்க், ஒக.21
இதுவரை அவதானிக்கப்பட்டதில் பூமிக்கு மிக நெருக்கமாக 1,830மைல்கள் தொலைவில் கார் ஒன்றின் அளவான விண்கல் ஒன்று கடந்து சென்றது என அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா குறிப்பிட்டுள்ளது.
எனினும் 2020கியு.ஜி. என்ற பெயர் கொண்ட இந்த விண்கல் பூமியுடன் மோதினாலும் அது வளி மண்டலத்திலேயே அழிந்து எந்த ஆபத்தை யும் ஏற்படுத்தாது.
10தொடக்கம் 20அடி நீண்ட இந்த விண்கல் தென்னிந்தியக் கடலுக்கு மேலால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூமியை நெருங்கி வந்துள்ளது.
அது வினாடிக்கு எட்டு மைல் வேகத்தில் பய ணித்துள்ளது. பூமிக்கு அருகே வரும் விண்கற்களின் வரலாற்றில் இது ஒரு சாதனை என தெரிவித்துள்ள நாசா விஞ்ஞானிகள், 45 டிகிரி அளவுக்கு சாய்வாக இந்த விண்கல் வந்ததால் அது பூமியின் வளிமண்டலம் மற்றும் புவி யீர்ப்பு சக்தியால் எரிந்து விடாமல் கெமரா வில் பதிவானது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள னர். (ரி1)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 21.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.